**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம், சித்திரை மாதம் 17 ம் நாள்

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ம் நாள் வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண். 48/2022**

<u>CNR.No.TNCB17-000060-2022</u>

D. சுசீலாதேவி, க/பெ. தியாகராஜன், இந்து,
வயது 68, வசிப்பிடம் 256-M, கற்பக விநாயக
நகர், பட்டணம், கோயம்புத்தூர் - 641 016. ... **வாதி**

//எதிர்//

ஏழுமலை, இந்து, வயது 63, வசிப்பிடம் 256 L,
கற்பக நகர், பட்டணம், கோயம்புத்தூர் - 641 016. ... **பிரதிவாதி**

வழக்குச் சொத்தின் பொதுப் பாதையின் மீது, வடக்கு முதல் தெற்காகச் செல்லும் 6 அடி அகலம் மற்றும் 30 அடி நீளம் கொண்டதாகக் கட்டப்பட்டுள்ள சுற்றுச்சுவர் மற்றும் படிக்கட்டை செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் மூலம் இடித்து அகற்றுமாறு பிரதிவாதிக்கு உத்தரவிட கோரியும், 6 அடி அகலமும் 30 அடி நீளமும் கொண்ட பொதுப் பாதையை வாதியும் அவரது குடும்பத்தினரும் பயன்படுத்துவதை பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ மற்றும் பணியாளர்களோ எந்த வகையிலும் எந்தவிதமான குறுக்கீடுகளையும், இடையூறுகளையும் ஏற்படுத்தாமல் இருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா செலவுத் தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கலான நாள் 24.02.2022

வழக்கு மூலம் எழுந்த நாள் 20.12.2007, 19.01.2022, 15.02.2022 சூலூர் இந்நீதிமன்ற அதிகார எல்லை வரம்புக்குட்பட்டது.

நீதிமன்றக் கட்டணம் மற்றும் அதிகார வரம்பிற்காக இந்த வழக்கின் மதிப்பு ரூ.2000/- என மதிப்பிடப்பட்டு, அதற்கு நீதிமன்றக் கட்டணம் ரூ.60/- தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் மற்றும் வழக்கு மதிப்பீட்டுச் சட்டம் 1955, திருத்தப்பட்ட சட்டம் 6/2017 பிரிவு 27(c)ன் கீழ் செலுத்தப்பட்டுள்ளது.

**<u>மதிப்பீட்டு விவரம்</u>**

| | | |
|---|---|---|
| செயலுறுத்துக் கட்டளை பரிகாரத்தின் மதிப்பு | ரூ. 1,000/- | |
| தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் மற்றும் வழக்கு மதிப்பீட்டுச் சட்டம் பிரிவு 27(c)ன் கீழ் நீதிமன்ற கட்டணம் | | ரூ.30/- |
| நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தின் மதிப்பு | ரூ. 1,000/- | |
| தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் மற்றும் வழக்கு மதிப்பீட்டுச் சட்டம் பிரிவு 27(c)ன் கீழ் நீதிமன்ற கட்டணம் | | ரூ.30/- |

இந்த வழக்கானது இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ஜெயக்குமார், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.J.கௌதம், அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்பாணை</u>**

1). வழக்குச் சொத்தின் பொதுப் பாதையின் மீது, வடக்கு முதல் தெற்காகச் செல்லும் 6 அடி அகலம் மற்றும் 30 அடி நீளம் கொண்டதாகக் கட்டப்பட்டுள்ள சுற்றுச்சுவர் மற்றும் படிக்கட்டை பிரதிவாதி இரண்டு மாத காலத்திற்குள்

இடித்து அகற்ற வேண்டும் என்று செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

2). 6 அடி அகலமும் 30 அடி நீளமும் கொண்ட பொதுப் பாதையை வாதியும் அவரது குடும்பத்தினரும் பயன்படுத்துவதை பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ மற்றும் பணியாளர்களோ எந்த வகையிலும் எந்தவிதமான குறுக்கீடுகளையும், இடையூறுகளையும் ஏற்படுத்தக் கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

3). செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகிறது.

**செலவு தொகை பட்டியல்**

//இல்லை//

(செலவு தொகைப் பட்டியல் இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை)

## DESCRIPTION OF PROPERTY

கோயமுத்தூர் ரிடிடு, சிங்காநல்லூர் சப்ரிடிடு, சூலூர் தாலூக்கா, பட்டணம் கிராமம், க.ச.83/1 நெ.காலை புஞ்சை 1.97.0 இதில் பு.ஏ. 4.50 விஸ்தீரணமுள்ள பூமியை மனையிடங்களாகப் பிரித்து "கற்பக விநாயகர் நகர்" எனப் பெயரிட்டுள்ள மனையிடத்தில், மனை எண்.63 ல் வடபுரம் ஓர் பகுதியான இந்த சொத்துக்கு செக்குபந்தியும் அளவுகளும்.

| | | |
|---|---|---|
| பார்க் இடத்திற்கும் | - | கிழக்கு |
| மனை இடம் 62 க்கும் | - | மேற்கு |
| மனை இடம் 64 க்கும் | - | தெற்கு |
| மனை எண்.63 தென்புரம் ஓர் பகுதிக்கும் | | |

6 அடி அகல தென்வடல் தடத்திற்கும் - வடக்கு

இதன் மத்தியில்

கிழமேல் இருபுரமும் - 37 அடி

தென்வடல் இருபுரமும் - 30 அடி

இந்தளவுகள் கொண்ட 1110 சதுரடிகள் விஸ்தீரணமுள்ள இடமும் மனை எண்.63 விடப்பட்டுள்ள 6 அடி அகல தென்வடல் தடத்தில் (6 x 30) 180 சதுரடியில் பொதுவில் சரிபாதி 90 சதுரடியும் ஆக மொத்தம் 1200 சதுரடிகள் அல்லது 02 செண்ட் 329 சதுரடிக்கு 111.49 சதுர மீட்டர், விஸ்தீரணமுள்ள மனையிடமும், மேற்படி மனையிடத்தில் கட்டியுள்ள ஆர்.சி.சி. தார்சு கட்டிடமும் அதனை சார்ந்த கதவு நிலவு கட்டுக்கோப்பும், எலக்ட்ரிக் லைட் பிட்டிங்குகள், சர்வீஸ் கனெக்‌ஷன் அதன் டிபாசிட் தொகை உட்படவும், உப்பு தண்ணீர் குழாய் இணைப்பு ஒன்றும், மேற்படி லேஅவுட் ரோடுகளில் நடந்து வண்டி வாகனாதிகள் செலுத்திக்கொள்ளும் பாத்தியமும், விடப்பட்டுள்ள 6 அடி அகல தென்வடல் தடத்தில் பொது பாத்தியம் சகிதம்.

கதவு எண்.6/256, வரி விதிப்பு எண்.1788, மின் இணைப்பு எண்.248.

இந்த சொத்து பட்டணம் பஞ்சாயத்துக்கு உட்பட்டது.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ம் நாளாகிய இன்று என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

சூலூர், அசல் வழக்கு எண். 48/2022

தீர்ப்பாணை, நாள்: 30.04.2026